## 72. பலங்கொண்டு திடமனதாய்

### பல்லவி

பலங்கொண்டு திடமனதாய் இருந்து விடு
திகையாதே கலங்காதே

### அனுபல்லவி

*நான் உன்னை விட்டு விலகவில்லை*
*நான் உன்னை என்றும் கைவிடவில்லை*

### சரணங்கள்

1. கால்மிதிக்கும் எவ்விடத்தை உனக்குகொடுப்பேன்
உனக்கு ஆதரவாய் என்றும் இருப்பேன்
உன் முன் இருக்கும் சவால்களை
உன்னோடு இருந்து சந்திப்பேன்
- பலங்கொண்டு

2. உயிரோடிருக்கும் நாளெல்லாம்
ஒருவனும் உன்னை எதிர்ப்பதில்லை
உன்னோடு யுத்தம் செய்வார்கள்
மேற்கொள்ளாமல் தோல்வி அடைவார்கள்
- பலங்கொண்டு

3. நீ போகும் இடமெல்லாம் உன்னோடு
உன் தேவனாகிய கர்த்தர் வருவாரே
என்னுடைய வார்த்தை உன் வாயைவிட்டு
என்றும் நீங்காமல் பார்த்து கொள்ளு
- பலங்கொண்டு